ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2130/39 - 2019 ජූලි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.07.04
*2130/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிர. செ. குறிப்பு இல.: டீஜவீஜபி/எல்என்டீ/எல்ஏடீஏகியு/ சீஈபி/ 05/2015/14.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டபிள்யு/498.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 522, பக்மீகொல்ல கிராம அலுவலர் பிரிவில், பரணகம்பிடிய கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நிலஅளவையாளரினால் 2019.06.12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இறுதி வரைபட இல. 1187, பிற்சேர்க்கை இல. 05, தாள் இல. 07 எனக் குறிப்பிடப்பட்ட 2.9898 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 14903- 14912 வரையான காணித் துண்டுகள் 6 இன் விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல.** *14903*

காணியின் பெயர்: பரணகம்பிடிய எஸ்டேட்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணி துண்டுகள் இல. 14886, ஆ. வ. இல. 3016 இல் காணி துண்டுகள் இல. 13427, 13420, 13430, 13431,13432,13429 மற்றும் 13425 இனது பகுதிகள். காணி எடுத்தற் சட்டத்தின் 38 (அ) அத்தியாயம் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆரம்ப உரிமை கோருபவர்: அபேகொட கீகியனகே சாந்தனி அல்கம. காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக; விஸ்தீரணம்: 2.2803 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல.** *14904*

காணியின் பெயர்: பரணகம்பிடிய எஸ்டேட்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணி துண்டு இல. 14887 இனது பகுதிகள். மத்திய அதிவேக நெடுஞ் சாலைத் திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.2921 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல.** *14906*

காணியின் பெயர்: பரணகம்பிடிய எஸ்டேட்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஆ. வ. 3016 இல் காணி துண்டு இல. 13425 இனது பகுதிகள். அபேகொட கீகியனகே சாந்தனி அல்கம என்பவரால் அனுமதி இன்றி எடுத்துக்கொள்ளப்பட்டது. மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.1276 ஹெக்டயார்.

1A - G 30452 - 32 (2019/07)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*04.* **துண்டு இல.** *14908*

காணியின் பெயர்: பரணகம்பிடிய எஸ்டேட்; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஆ. வ. 1296 இல் காணி துண்டு இல. 6826பீ இனது பகுதி. மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0823 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல.** *14911*

காணியின் பெயர்: பரணகம்பிடிய எஸ்டேட்; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணி துண்டு இல. 14891 இனது பகுதிகள். மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0566 ஹெக்டயார்.

*06.* **துண்டு இல.** *14912*

காணியின் பெயர்: தெதுறு ஓய; விபரம்: ஆறு; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணி துண்டுகள் இல. 14891 இனது பகுதிகள். மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.1509 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டு தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். ஏ. எஸ். மாரசிங்க,
பிரதேச செயலாளர்,
இப்பாகமுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இப்பாகமுவ.

7 - 641

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.